**சுருக்கம்**

தொழில்நுட்பக் கல்வி – அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்குதல் – புதிய நடைமுறை பின்பற்றுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (பி1) துறை

அரசாணை (நிலை) எண்.61 | 16502 | நாள் : 02.05.2012.
சித்திரை, 20,
திருவள்ளுவர் ஆண்டு 2043.

படிக்கப்பட்டவை :–

1. அரசாணை (நிலை) எண்.288, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 17.08.2007.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையர், கடித எண்.3473/ஒய்3/ சிடிசி/2011, நாள் 20.06.2011, 21.07.2011 மற்றும் 05.08.2011.
3. தொழில்நுட்பக் கல்வி ஆணையர், கடித எண்.3473/ஒய்3/ சிடிசி/2011, நாள் 28.09.2011 மற்றும் 13.03.2012.

-----

ஆணை :–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், Mathematics, Applied Mathematics, Engineering Physics and Engineering Chemistry ஆகிய பாடப் புத்தகங்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் அச்சிட்டு, அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்கு இலவசமாக வழங்க ஆணையிடப்பட்டது.

2. மேலும், 2011–2012 ஆம் கல்வியாண்டில், Communication English I & II (Single Volume), Engineering Mathematics I & II (Single Volume), Engineering Mathematics III & IV (Single Volume), Engineering Physics I & II (Single Volume) மற்றும் Engineering Chemistry I & II (Single Volume) ஆகிய பாடப் புத்தகங்களை 12,500 பிரதிகள் வீதம் தோராயமாக ரூ.14,25,000/– மதிப்பீட்டில் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் அச்சிட்டு அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கிட மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

3. பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 22.03.2012 கடைசி வேலை நாள் என்பதாலும், 28.03.2012 செய்முறைத் தேர்வு (Practical Exams) தொடங்க உள்ளதாலும், முதலாமாண்டு மாணவர்களுக்கு 2011–2012 ஆம் ஆண்டிற்கு பாடப் புத்தகங்கள் விநியோகிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. அந்த பாடநூல்கள் அனைத்தும் www.tndte.gov.in இணையதளத்தில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. மேலும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள விலையில்லா மடிக்கணினியில் 'L-Scheme'–இல் வெளியிடப்பட்ட

.....2.

பாடநூல்கள் (5 தலைப்புகள்) இணைத்து வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.9, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 25.01.2012-இல் ஆணையிட்டுள்ளபடி, 2011-2012 ஆம் கல்வியாண்டில் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்கு இரண்டாம் பருவ வகுப்புகள் முடிய உள்ள நிலையில், மேற்படி புத்தகங்களை (அச்சடிக்கப்பட்ட பாடநூல்கள்) வரும் கல்வியாண்டு 2012-2013 துவக்கத்திலேயே முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு விநியோகிக்கவும், மேலும் வருங்காலங்களில் கல்வியாண்டு துவங்குவதற்கு முன்னரே பாடப்புத்தகங்கள் அச்சிட்டு தயார்நிலையில் வைத்து, கல்லூரி துவங்கும் தருணத்திலேயே மாணவர்களுக்கு விநியோகம் செய்ய ஆணை வேண்டி (2012-2013 ஆம் கல்வியாண்டிற்கு தற்போது அச்சிட்டு தயார்நிலையில் இருப்பதுபோல்) தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், இந்த ஆண்டு (2011-2012) அச்சிடப்பட்ட புத்தகங்கள் வரும் கல்வியாண்டின் (2012-2013) தொடக்கத்தில் விநியோகிக்கவும், வரும் கல்வியாண்டில் (2012-2013) அச்சடிக்கப்படவுள்ள புத்தகங்கள் அடுத்த கல்வியாண்டின் (2013-2014) துவக்கத்தில் விநியோகிக்கவும், இந்நடைமுறையினை தொடர்ச்சியாக செயல்படுத்துவதற்கும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று, இனி வருங்காலங்களில், ஒவ்வொரு கல்வியாண்டும் துவங்குவதற்கு முன்னரே பாடப்புத்தகங்களை அச்சிட்டு தயார் நிலையில் வைத்து, கல்லூரி துவங்கும் தருணத்திலேயே மாணவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்கு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை-25.
செயலாளர், தமிழ்நாட்டு பாடநூல் கழகம், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.

நகல்
நிதித் (வரவு-செலவு பொது-2 / கல்வி-1) துறை, சென்னை-9.
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ந.கோ./உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

ந. சுரேஷ்குமார் 3/5/12
பிரிவு அலுவலர்.